**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சட்ட பீடம்**

**சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு IV (நிகழ்நிலை) – 2022**

# சட்டவியல்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **06**

**மூன்று (03)** வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்க.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

01. புலனறிவுவாதத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சியானது சட்டத்தின் தார்மீகப் பரிமாணக் கருத்தேற்பினை பெருமளவிற்கு மாற்றியமைத்திருப்பினும், இயற்கைச் சட்டத்தின் பாரம்பரியத்தினைத் தொடர தனித்துவமான வழிகளையும் உபாயங்களையும் நவீன யுகத்தின் சட்ட முறைமைகள் கையாளுகின்றன.

    நியதிச்சட்ட மற்றும் நீதிமுறைமை ஊடாக இயற்கைச் சட்டத்தின் பிரதான கோட்பாடுகள், குறைந்தது இரண்டினை, நிலைநிறுத்துவதில் இலங்கையின் அணுகுமுறைகளினை மேற்கோள்காட்டி மேலுள்ள கூற்றினை நுணுக்கமாக ஆய்வு செய்க. (100 புள்ளிகள்)

02. இலங்கையானது ஒரு வரலாற்றுரீதியிலான அரசியற் புரட்சியின் விளிம்பில் அல்லது சட்ட ஒழுங்கு சீர்குலைந்துள்ள நிலையில் உள்ளது. இப்புரட்சி நிலைமையானது அடிப்படை நியமத்தின் வலிதுடமை மற்றும் செயற்றிறன் மற்றும் ஏற்கனவே உள்ள அரசாங்கத்தின் நெறிமுறையாந்தன்மை என்பவற்றை கேள்விக்குட்படுத்துகின்றது

    கெல்சனின் தூய சட்டக் கொள்கையின் பின்னணியில் இலங்கையின் தற்போதைய சூழ்நிலையின் சட்ட ஒழுங்கற்ற தன்மையினை நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்க. உமது பகுப்பாய்வானது எடுத்துக்காட்டுக்களினை வழங்கி ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டுமென நீர் எதிர்பார்க்கப்படுகின்றீர். (100 புள்ளிகள்)

03. ஆஸ்டின் (Austin) மற்றும் பென்தம் (Bentham) ஆகியோரால் வழிவகுக்கப்பட்ட மரபுவழி மற்றும் கருத்தியல் பொறிகளிலிருந்து சட்டப் புலனறிவுவாதத்தினை விடுவிப்பதற்கு H. L. A. ஹார்ட் (Hart) முயற்சிக்கின்றார். ஆஸ்டின் மற்றும் பென்தம் ஆகியோரையும் விட ஹார்டினுடைய சட்டக் கோட்பாடானது சமகால சட்ட முறைமைகளுக்கு அதிக பொருத்தமுடையதாகும்.

இந்த வாதத்துடன் நீர் உடன்படுகின்றீரா? ஆஸ்டின் (Austin) மற்றும் பென்தம் (Bentham) இனால் முன்னிலைப்படுத்தப்பட்ட பாரம்பரிய புவனறிவுவாதத்தில் பொதிந்துள்ளதை விட 'அறிவுரீதியான செறிவூட்டப்பட்டதும் சமூகப் பொருத்தமானதும்' என நீங்கள் இனங்காண்கின்ற ஹார்ட்டினது கொள்கையின் அம்சங்களை நுணுக்கமாக ஆராய்க. சமகால சட்டமுறைமைகளிலிருந்து பெறப்பட்ட உதாரணங்கள் மூலம் உமது விடையினை ஆதாரப்படுத்துக. (100 புள்ளிகள்)

04. இலங்கையானது தற்போது அரசியல், பொருளாதார, மருத்துவ மற்றும் மனிதாபிமான நெருக்கடிகளுக்கு மத்தியில் உள்ளது. இந்நிலைமையினை இலங்கை அரசாங்கம் கையாளும் விதத்திற்கு தம் அதிருப்தியினை வெளிப்படுத்தும் முகமாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் (FUTA) உள்ளடங்கலாக தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்த வேலைநிறுத்தங்களினை ஏற்பாடு செய்து தமது வழமையான கடமைகளினை புறக்கணித்தன. இவ்வாறான சில தொழிற்சங்க நடவடிக்கைகள், மாணவர்கள் உள்ளடங்கலாக, மக்களின் உரிமைகளினை மீறுபவையாக அமைந்திருந்தன.

ராஸ்கோ பவுண்டினுடைய (Roscoe Pound) சமூக பொறியியல் கோட்பாட்டின் பின்னணியில் மாணவர்களின் உரிமைகளுக்குச் சிறப்பு முக்கியத்துவம் கொடுத்து மேற்போந்த சூழ்நிலையினை ஆராய்க. உமது விடையினை தத்துவக் கண்ணோட்டத்தில் ஆதாரப்படுத்துக. (100 புள்ளிகள்)

05. *Roe v. Wade* 410 U.S. 113 ஆனது கடந்த நூற்றாண்டில் வழங்கப்பட்ட மிகவும் செல்வாக்கு மிக்கதொரு தீர்ப்பாகும். முதல் மூன்று மாதங்களின் போது அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளின்றி கருவினைக் கலைப்பதனை இத்தீர்ப்பானது பெண்களுக்கு சட்டரீதியானதாக மாற்றியது. எனினும், இவ்வழக்கிற்கு விமர்சனங்கள் இல்லாமலில்லை. சட்டவாக்கத்துறையின் வகிபங்கினுள் நீதிமன்றமானது அத்துமீறியுள்ளது என்பது மிகப் பெரிய விமர்சனமாகும். *Roe v. Wade* தீர்ப்பினை புறத்தொதுக்கக் கூடியதான உயர் நீதிமன்றின் கருத்தின் ஆரம்ப வரைபு மே 2022 இல் வெளியில் கசிந்தது. உயர் நீதிமன்றின் கருத்தினை உள்வாங்கி குறித்த தீர்ப்பு வழங்கப்பட்டவுடன் கருக்கலைப்பை சட்டரீதியற்றதாக்குவதற்கு ஐக்கிய அமெரிக்காவின் 20 மாநிலங்கள் தயாராக உள்ளன.

உம்மை ஒரு தெரிவுச் சார்புள்ள மனித உரிமை ஆர்வலர் (*Roe v. Wade* தீர்ப்புக்கு சார்பாக) அல்லது உயிர்வாழ்வு சார்புள்ள மனித உரிமை ஆர்வலராக (*Roe v. Wade* தீர்ப்புக்கு எதிராக) கருதுக. நீதிமன்றின் வகிபங்கு, நீதிபதிகளின் கடமை மற்றும் சட்டத்தின் வளர்ச்சிக்கான அவர்களின் எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பு என்பவை தொடர்பான அமெரிக்க யதார்த்தவாதத்தின் பின்னணியிலான நியாயமான கருத்துரையொன்றை எழுதுக. பொருத்தமான சட்ட அதிகார ஆதாரங்களின் ஊடாக உமது விடையினை ஆதாரப்படுத்துக. (100 புள்ளிகள்)

06. சமத்துவமான நடாத்துகை மற்றும் அனைத்து வகையான ஒடுக்குமுறைகளினையும் இல்லாமலாக்குதல் என்பவற்றுக்கான பெண்களின் நீண்டகாலத் தேடுதல் தொடர்பில் பாராட்டத்தக்க சாதனைகளை அண்மைக்காலத்தில் உலகம் கண்ணுற்றிருப்பினும் இலங்கையின் சட்டமுறைமையானது விருத்தியடைவதற்கு இன்னும் இடமுண்டு.

நீர் உடன்படுகின்றீரா? இலங்கை மற்றும் ஆகக்குறைந்தது வேறொரு நியாயாதிக்கம் மற்றும் பொருத்தமான அதிகார ஆதாரங்களிலிருந்து பெறப்பட்ட உதாரணங்களை மேற்கோள் காட்டி உமது நிலைப்பாட்டினை நியாயப்படுத்துக. (100 புள்ளிகள்)

*****